# வௌவால் புரூக்கின் மாறுபட்ட இரவு அனுபவம்



குழந்தைகளுக்கான வண்ணமடிக்கும் புத்தகம்

© Maya Weissman 2022

இந்த புத்தகம் ஸ்வார்ட்ஸ்
ஆய்வகத்தின் ஆராய்ச்சியால்
ஈர்க்கப்பட்டது.
உருவாக்கியது: ப்ரூக் க்வின்

உரை மற்றும் விளக்கப்படங்கள்:
மாயா வெய்ஸ்மேன்

மொழிபெயர்ப்பு: சக்தி ஸ்வரூப்
ஜெயபாலன்

வருகை
www.batflight.org

AEROMECHANICS AND
EVOLUTIONARY MORPHOLOGY
BROWN UNIVERSITY

© Maya Weissman 2022

புரூக் என்பது டவுன்செண்டின் வகை பெரிய காது வெளவால். அது சிரிகாவா மலைகளில் வசிக்கிறது.



பெரும்பாலான வெளவால்களைப் போலவே, புரூக்கும் இரவில் சுறுசுறுப்பாக இருக்கும். சூரியன் மறைந்துவிட்டது. அப்படியானால் புரூக் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டிய நேரமும் வந்துவிட்டது!

© Maya Weissman 2022

இது உணவுக்கான நேரம்!
சாப்பிடுவதற்காக ஒரு சுவையான
அந்திப்பூச்சியை புரூக் பிடித்தது.
புரூக் ஒரு பூச்சி உண்ணி. அது
பூச்சிகளை மட்டுமே சாப்பிடும்.



© Maya Weissman 2022

புரூக்கின் நண்பர்களான மற்ற வெளவால் இனங்கள் ஒவ்வொன்றின் உணவும் வேறுபடும்.




பல்லிட் வெளவால்:
அனைத்துண்ணி



கற்றாழை




பெரிய பழுப்பு வெளவால்:
பூச்சி உண்ணி



பல்லி



நீண்ட நாக்கு வெளவால்:
தேன் உண்ணி



பொறிவண்டு

புரூக்கின் நண்பர்களை அவற்றுக்கான சரியான உணவுடன் பொருத்துங்களேன்!

© Maya Weissman 2022


புரூக் தன் உணவை வேட்டையாட, மற்ற உயிரினங்களை அடையாளம் காண, தடைகளைத் தவிர்க்க மீயொலி அலைகளைப் பயன்படுத்துகிறது. சுருக்கமாக, மீயொலி அலையால் அது பார்க்கிறது.



ஆனால், துரதிர்ஷ்டவசமாக தனக்கு முன்னால் இருக்கும் மெல்லிய வலையை அதனால் கண்டறிய முடியவில்லை. அதிர்ஷ்டவசமாக அந்த வலை சில விஞ்ஞானிகளுக்குச் சொந்தமானது.

© Maya Weissman 2022

ஒரு திரைப்படத்தில் நடிப்பதற்காக விஞ்ஞானிகளுக்கு புரூக் தேவைப்பட்டது.



புரூக் நடிக்கும் காட்சிகளை பதிவுசெய்வதற்கு முன், அதன் மூட்டுகளைத் தெளிவாக அறிவதற்கு புரூக்கின் மூட்டுகளில் வெள்ளைப் புள்ளிகளை விஞ்ஞானிகள் வரைந்தார்கள்.

© Maya Weissman 2022

லைட்ஸ், கேமரா, ஆக் ஷன்... இதோ புரூக் வௌவால் ஒரு திரைப்பட நட்சத்திரமாக மாறிவிட்டது.



வௌவால்கள் எப்படிப் பறக்கின்றன என்பதைப் பற்றிக் கூடுதலாக அறிவதற்கு புரூக் நடித்தத் திரைப்படத்தை விஞ்ஞானிகள் பயன்படுத்துவார்கள்.

© Maya Weissman 2022


புரூக் பங்கேற்ற படப்பிடிப்பு
இப்போது முடிந்துவிட்டது.
விஞ்ஞானிகளிடம் விடைபெற்று
புரூக் பறந்து சென்றது.



சிரிகாவா மலைப்பகுதியில்
வாழ்வதை புரூக் விரும்புகிறது.
ஏனென்றால் விஞ்ஞானிகள்,
வௌவால்கள், கொவாட்டிமுண்டி
உயிரினம் போன்ற புதிய
நண்பர்களை புரூக் அங்கு சந்திக்க
முடிகிறது.

© Maya Weissman 2022

புரூக் இந்த சாகசங்களை
நிகழ்த்திய பிறகு, அதற்குத்
தாகமாக இருந்தது. அது தண்ணீர்
பருகுவதற்காக ஏரிக்குக் சென்றது.



© Maya Weissman 2022

இதோ சூரியன் உதிக்கத் தொங்கிவிட்டது. தனக்கு ஆசுவாசம் தரும் குகைக்கு புரூக் உறங்கச் செல்லவேண்டிய நேரம் இது.



புரூக் என்ன கனவு காண்கிறது என்று உங்களுக்குத் தோன்றுவதை வரையலாமே!

© Maya Weissman 2022

சக்தி ஸ்வரூப் ஜெயபாலன் பூச்சிகள், வௌவால்கள் எவ்வாறு பறக்கின்றன என்பதை ஆய்வு செய்யும் ஒரு விஞ்ஞானி ஆவார். தற்போது, பிரவுன் பல்கலைக்கழகத்தில் மெல்லிய, நெகிழ்வான மற்றும் மீள் தன்மை கொண்ட வௌவால் போன்ற இறக்கைகளை உருவாக்குவதிலும் அது
உருவாக்கும் காற்றியக்க சக்திகளை புரிந்துகொள்வதிலும் ஈடுபட்டுள்ளார்.



© Maya Weissman 2022